

திருவாட்டி அ. காயத்ரி
**MDM A GAYATHREE**
ஜெமின் தொடக்கப்பள்ளி
**JIEMIN PRIMARY SCHOOL**
தொடக்கப்பள்ளிப் பிரிவு
**PRIMARY SCHOOL CATEGORY**

"தமிழ் என்பது வெறும் மொழி மட்டுமன்று — அம்மொழியைப் பேசுவோரின் பண்பாடு, பாரம்பரியம், அடையாளம் ஆகியவற்றின் உயிரோட்டமான வெளிப்பாடு. அதனால்தான், ஒரு தமிழாசிரியராக எனது நோக்கம் மொழித்திறன்களைக் கற்பிப்பதற்கும் அப்பாற்பட்டது என்பேன். தமிழ்ப் பாரம்பரியம், பழக்கவழக்கங்களின் வளமையில் மாணவர்களை ஈடுபடுத்த நான் முயல்கிறேன். மாணவரின் கற்றல் பயணத்தின் ஒவ்வொரு படியையும் அங்கீகரித்துக் கொண்டாட வேண்டும் என்று நான் விழைகிறேன். அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும், ஒவ்வொரு மைல்கல்லும் தன்னம்பிக்கையை வளர்த்து, வாழ்நாள் முழுவதும் வளர்ச்சி பெற வேண்டும் என்ற விருப்பத்தை ஊக்குவிக்கிறது. நான் அடிக்கடி என் மாணவர்களுக்கு நினைவூட்டும் தமிழ்ப் பழமொழி: "கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு." காலத்தால் அழியாத இந்த ஞானம் நம்மைப் பணிவுடனும் ஆர்வத்துடனும் இருக்க ஊக்கந்தருவதால், கற்றலை நாம் வாழ்நாள் முழுவதுக்குமான தொடர் பயணமாக ஏற்றுக்கொள்கிறோம்."

**“Tamil is not merely a language—it is a living expression of the culture, traditions, and identity of its speakers. As such, my goal as an educator goes beyond teaching linguistic skills; I strive to immerse students in the richness of Tamil heritage and customs. I believe in recognising and celebrating every step of a student’s learning journey. Each milestone, no matter how small, builds self-confidence and fosters a lifelong desire to grow. As I often remind my students with a cherished Tamil proverb: “*What we have learned is a mere handful; what we haven’t is the size of the world.*” This timeless wisdom inspires us to remain humble and curious, embracing learning as a lifelong and limitless pursuit.”**



திருவாட்டி நூர்மனிஷா சர்மணி
**MDM NORMANISHA SARMANI**
வெஸ்ட் வியூ தொடக்கப்பள்ளி
**WEST VIEW PRIMARY SCHOOL**
தொடக்கப்பள்ளிப் பிரிவு
**PRIMARY SCHOOL CATEGORY**

"ஒவ்வொரு மாணவரும் இளம் மூங்கில் தண்டைப் போன்று பேராற்றல் மிக்கவராவர். ஓர் ஆசிரியராக, அவரைக் கவனமாக வழிநடத்தி, அவரது திறமைகளை வெளிக்கொணர்வதே என் பணியாகும். அப்பணியைச் செவ்வனே மேற்கொள்ளும்போது அந்த மாணவர் இனிய இசை எழுப்பும் புல்லாங்குழலாக மாறுகின்றார். அவர் தன்னம்பிக்கையுடன் கற்பதையும் அவரது திறமைகள் மேம்படுவதையும் காணும்போது, எனக்குள் ஒருவிதப் பெருமிதம் மலர்கின்றது. அதனால், எனது கற்பித்தல் பணியை நான் என் வாழ்க்கையில் பெற்ற ஒரு வரமாகக் கருதுகின்றேன்."

**“Teaching is akin to carving flutes from bamboo. Each child is like a bamboo stalk filled with untapped potential, waiting to be shaped with care and purpose. As a teacher, my role is to nurture and develop each student’s unique strengths, guiding their raw potential into meaningful growth and purpose. The deepest fulfilment in teaching comes from witnessing that transformation and seeing students’ confidence take root, skills flourish, and knowing that I’ve helped craft flutes whose melodies will echo across society. Each note represents a life touched and a path inspired.”**



திரு இராமசாமி ஸ்டாலின்
**MR RAMASAMY STALIN**
புக்கிட் வியூ உயர்நிலைப்பள்ளி
**BUKIT VIEW SECONDARY SCHOOL**
உயர்நிலை/புகுமுகப் பிரிவு
**SECONDARY / PRE-U CATEGORY**

“ஒவ்வொரு பிள்ளையும் கற்க விரும்புவார். ஒவ்வொரு பிள்ளையாலும் கற்க முடியும் என்னும் நம்பிக்கையை மையமாகக் கொண்டுள்ளது எனது கற்பித்தல் கோட்பாடு. ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் முழுமையான வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையிலும் வகுப்பறைச் சூழலை அமைத்துக்கொடுப்பதன் வாயிலாக இது சாத்தியமாகும். அக்கறையும் பாதுகாப்பும் நிறைந்த வகுப்பறைச் சூழலை உருவாக்குவதன்மூலம் மாணவர்கள் தனிநபராகவும் ஒன்றிணைந்து கற்பவர்களாகவும் சிறந்து விளங்க முடியும் என்பது எனது நம்பிக்கை. எனது கற்பித்தல் நடைமுறை, மாணவர்களிடையே 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களை வளர்த்து அவர்களை எதிர்கால வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. இந்தக் குறிக்கோளை அடைவதற்கு ஆசிரியர்கள் அனைவரும் தொடர்ந்து பணித்திறன் மேம்பாட்டில் ஈடுபடுவது அவசியம் என்பதும் எனது திடமான நம்பிக்கை ஆகும்.”

**“My teaching philosophy is grounded in the belief that every child can and wants to learn when nurtured in a stimulating and positive classroom environment. I strive to create a safe and caring space where students thrive both as individuals and as collaborative learners, while cultivating the 21st century competencies essential for their future readiness. As an educator, I am deeply committed to continuous professional growth, recognising that my development is integral to fulfilling this vision and empowering my students to reach their fullest potential.”**



திரு சரத்குமார் கணசேகரன்
**MR SARATKUMAR GANASEKARAN**
குவீன்ஸ்டவுன் உயர்நிலைப்பள்ளி
**QUEENSTOWN SECONDARY SCHOOL**
உயர்நிலை/புகுமுகப் பிரிவு
**SECONDARY / PRE-U CATEGORY**

"ஒவ்வொரு பிள்ளையும் கற்க விரும்புவார். ஒவ்வொரு பிள்ளையாலும் கற்க இயலும் என்பதால் நம் தமிழ் மாணவர்கள் தமிழ்மொழியைக் கற்றலில் ஆர்வமும் பயன்பாட்டில் தன்னம்பிக்கையும் கொள்வார்கள் என நான் நம்புகிறேன். சிங்கப்பூரில் தமிழை வாழும் மொழியாக நிலைபெறச்செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை ஆசிரியர்களாகிய நாம் நன்கு உணர்ந்துள்ளோம். ஒவ்வொரு பிள்ளைக்கும் கற்பதற்கு விருப்பமும் திறனும் உண்டு என நம்புகிறோம். வாழும் மொழியான தமிழ், வளமான பண்பாட்டுப் பாரம்பரியம், குடும்ப விழுமியங்கள், தனிப்பட்ட அடையாளம் ஆகியவற்றில் ஆழமாக வேரூன்றியுள்ளது. புத்தாக்கமிக்க, தொழில்நுட்பத்தால் மேம்படுத்தப்பட்ட, அனுபவ அடிப்படையிலான அணுகுமுறைகள்மூலம், மாணவர்களின் தன்னம்பிக்கை, பண்பாட்டுப் பெருமிதம், நுண்ணாய்வுச் சிந்தனையை வளர்க்க நான் இலக்குக் கொண்டுள்ளேன். மாறுபடு தேவைகளுடைய கற்பவர்களுக்கு ஆதரவளித்து, அவர்களிடம் குறிப்பாக மரியாதை, நன்றியுணர்வு, மீள்திறன் ஆகிய விழுமியங்களை வளர்ப்பதில் நான் முன்மாதிரியாகத் திகழ முயல்கிறேன். இத்தகைய ஆதரவுடன், வலுவான வீடு-பள்ளி கூட்டு முயற்சியால், உண்மையான கற்றல் அனுபவங்களை உருவாக்கி, பன்முகக் கலாசாரங்கொண்ட சிங்கப்பூர்ச் சூழலில் தமிழ்மொழி பொருத்தமானதாகவும் ஈர்க்கக்கூடியதாகவும் அமையுமாறு கற்பிக்கிறேன். இதன்மூலம் தன்னம்பிக்கை கொண்ட தனிநபர்களையும், சமூகத்திற்கு முனைப்புடன் பங்களிப்பாளர்களையும் வளர்க்கிறேன்."

**“As educators, we believe that every child has the desire and ability to learn. Tamil, as a living language, is deeply rooted in rich cultural heritage, family values, and personal identity. Through innovative, technology-enhanced, and experiential approaches, I aim to develop students’ confidence, cultural pride, and critical thinking. As a role model, I strive to instill the values of respect, gratitude, and resilience, especially in supporting diverse learners. By providing structured support, fostering strong home-school partnerships, and curating authentic learning experiences, I make Tamil relevant and engaging in our multicultural Singaporean context, nurturing confident individuals and active contributors to society.”**



## திரு இப்ராஹீம் அஷ்ரப் அலி

## MR IBRAHIM ASHARAF ALI

யீஷூன் டவுன் உயர்நிலைப்பள்ளி

**YISHUN TOWN SECONDARY SCHOOL**

தேசியக் கல்விக் கழக சிறந்த பயிற்சி ஆசிரியர் விருது

**NIE BEST TRAINEE TEACHER AWARD**

“கற்பித்தல் என்பது ஏட்டுக்கல்விக்கு அப்பாலும் விரிந்து செல்வது. மாணவர்கள் தத்தம் திறமைகளைக் கண்டறியவும், சமூகத்திற்குப் பங்காற்றும் வகையில் கனிவும், பொறுப்பும் கொண்டவர்களாக முன்னேறவும் அவர்களுக்கு உதவுவது ஆசிரியராகிய என் கடமையாகும். மேலும், ஒவ்வொரு பிள்ளையாலும் கற்க இயலும் என்பதில் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை உள்ளது. ஆனால், ஒவ்வொருவரும் தங்களுக்கேற்ற தனிப்பட்ட வகையிலும் வேகத்திலும் கற்றுக்கொள்வார்கள். அதற்கு, பொறுமையும் பரிவுணர்வும் ஒவ்வொரு மாணவரின் தனித்துவமான கற்றல் பயணத்தை மதித்துப் போற்றுதலும் அவசியமாகிறது.”

**“Teaching extends beyond the classroom and academic outcomes. As a teacher, my role is to help students discover their strengths and grow into kind, responsible individuals who contribute meaningfully to society. I believe that every child can learn, though each does so in their own way and at their own pace. This calls for patience, empathy, and a deep appreciation of each student’s unique journey.”**



## முனைவர் விஜயராணி கோவிந்தசாமி

## DR VIJAYARANI GOVINDASAMY

வாழ்நாள் சாதனையாளர் விருது

**LIFETIME ACHIEVEMENT AWARD**

“மண்ணில் பிறக்கும் எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்! பள்ளி வரும் எல்லாக் குழந்தைகளுக்கும் கற்கும் திறம் உண்டு என்பதும் உண்மையே. அதுதான் என் ஆணித்தரமான நம்பிக்கை. 50 ஆண்டுகளாகத் தமிழாசிரியராகப் பணியாற்றும் அனுபவம் எனக்குண்டு. வகுப்பறைக்கு அப்பாலும் கற்றல் கற்பித்தல் தொடரவேண்டும் என்பதை நான் வலியுறுத்துவேன். பாடக்கலைத்திட்டத்தின்படி பயிற்றுவளங்களைப் பயன்படுத்தித் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்வது மட்டுமல்ல ஓர் ஆசிரியரின் கடமை. மாணவர்கள் தன்னம்பிக்கையையும் தமிழ்மொழியாற்றலையும் வளர்த்துக்கொள்வதோடு நமது பண்பாட்டையும் விழுமியங்களையும் கற்று அவற்றைத் தம் வாழ்விலும் கடைப்பிடித்திட வேண்டும் என்பதற்கு நான் முக்கியத்துவம் அளிப்பவள். அதனால்தான் தமிழுணர்வும் நற்பண்புகளும் எனது பணியின் அடிப்படைக்கூறுகளாக அமைந்துள்ளன. எனக்குத் தமிழ் என்பது வெறும் பணி மட்டுமன்று; அது வாழ்க்கைக் கடமையாகவும் அமைகிறது. மாணவர்களின் வெற்றி எனது வெற்றியாகும். ஒவ்வொரு வகுப்பும், நம் மொழியைச் சுடர்விட்டு ஒளிரச் செய்யும் அரிய முயற்சியாகும்.”

**“As a Tamil teacher in Singapore with 50 years of dedicated service, I view teaching as a lifelong commitment to nurturing young minds and preserving cultural heritage. To me, Tamil is more than a language. It is a vital bridge to our identity and traditions. My goal has always been to instill in every learner a deep love, respect, and pride for the Tamil language. My teaching philosophy is grounded in patience, adaptability, and the creation of a classroom environment where every student feels valued and inspired. I embrace change with an open mind, while staying anchored in enduring values. Teaching is not simply a profession. It is a calling. Each student’s growth is my greatest reward, and every lesson taught is a step toward safeguarding our timeless language for generations to come.”**